செ.வெ.எண்:48 நாள்:26.06.2020

# <u>பத்திரிகைச் செய்தி</u>

**வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) பசலி-1429:** கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு தமிழக அரசால் தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு மக்கள் கூட்டமாக ஓரிடத்தில் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் 1429ஆம் பசலி (2019-2020) ஆண்டிற்கு வருவாய்த் தீர்வாயம் நடத்தி மக்களிடம் நேரிடையாக மனுக்களைப் பெற்றுக்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே, பொதுமக்கள் தங்கள் மனுக்களை 29.06.2020 முதல் 15.07.2020 வரை இ-சேவை மையங்களின் மூலமாகவோ அல்லது http://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணையதளத்தின் மூலமாகவோ விண்ணப்பிக்குமாறு தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

| வ.எண். | வட்டத்தின் பெயர் | வருவாய் தீர்வாய அலுவலர்கள் விவரம் |
|---|---|---|
| 1. | தேனி | மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி. |
| 2. | உத்தமபாளையம் | மாவட்ட வருவாய் அலுவலர், தேனி. |
| 3. | பெரியகுளம் | சார்-ஆட்சியர், பெரியகுளம். |
| 4. | போடிநாயக்கனூர் | வருவாய் கோட்டாட்சியர் (பொ), உத்தமபாளையம். |
| 5. | ஆண்டிபட்டி | தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.), தேனி. |

ஆகவே, பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை மேற்கண்ட நாட்களில் (29.06.2020 முதல் 15.07.2020 வரை) இ-சேவை மையங்களின் மூலமாகவோ அல்லது http://gdp.tn.gov.in/jamabandhi என்ற இணையதளத்தின் மூலமாகவோ அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு "ஜமாபந்தி மனு" எனக் குறிப்பிட்டு பதிவேற்றம் செய்து கொள்ளலாம் எனவும், அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும் மனுக்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு தீர்வு வழங்கப்படும் எனவும் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**